1990 ஏப்ரல் 20] *[திரு. கே. சுந்தர்]*

நாள் கோரிக்கையான செங்கை—அண்ணா மாவட்டத்திலே, தனியாக ஒரு போக்குவரத்துக் கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிலும் குறிப்பாக, காஞ்சிபுரத்தையோ அல்லது செங்கல் பட்டையோ தலைமையிடமாகக் கொண்டு, செங்கை—அண்ணா மாவட்டத்திலே அமைய இருக்கின்ற போக்குவரத்துக் கழகமாக இருக்கின்றபடியால், பேரறிஞர் அண்ணாவின் உண்மைத் தம்பியும், உண்மையான புரட்சித் தலைவருமாக விளங்குகின்றவருமான டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரை அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு அமைத்திட வேண்டுமென்ற எங்கள் மாவட்ட மக்களின் ஆசையை இந்த அரசின் முன் வைத்து, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

7. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து முதலமைச்சருடன் கர்நாடக முதல்வர், சென்னையில் நடத்திய பேச்சுவார்த்தைகளையொட்டி அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களே, விதி எண் 110-இன் கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அறிக்கையினை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அவைக்கு அளிக்கின்றார்கள்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைய வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் தங்களுடைய இதயம் திறந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து, மிக ஆவலோடு நேற்றையதினம் நடை பெற்ற பேச்சுவார்த்தையினுடைய முடிவுகளை எதிர்பார்த்திருக்கின்ற சூழ்நிலையில் இந்த அறிக்கையை முன் வைத்து, இந்த அவையினுடைய ஏகோபித்த ஆதரவைப் பெறுவதற்காக, நான் இந்த அவையின் முன்னால் நிற்கின்றேன்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்த பிரச்சினைக்காக, 19-4-1990 அன்று காலை 9 மணி அளவிலே தமிழக முதலமைச்சர் கூட்டிய தமிழக சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அதிலே எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு :—

1. 1892, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களில் தமிழ் நாட்டுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகள் பாதிக்கப்படக் கூடாது.

2. 1974-இல் மத்திய உணவு அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர், கர்நாடக முதலமைச்சர் ஆகியோரிடையே நடந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளில், தமிழ்நாட்டின் சார்பில் ஒப்புக் கொண்டவாறு மேட்டூர் அணைக்கு கர்நாடகத்திலிருந்து வரும் நீரில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 100 டி.எம்.சி. சிக்கனப்படுத்துவதன் மூலம் குறைத்துக் கொள்ள ஒப்புக் கொள்ளலாம்.

11-00 மணி

3. இந்த அடிப்படையில் பேச்சுவார்த்தையின் மூலமாக கர்நாடக முதலமைச்சருடன் சுமுகமாக ஒரு தீர்வு காண முற்படலாம்

4. இன்று 19–4–1990 நடக்க இருக்கும் பேச்சுவார்த்தைகள் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகளாக இருக்க வேண்டும். இதில் உடன்பாடு ஏற்படாவிட்டால், மத்திய அரசை இனியும் காலதாமதமின்றி காவிரி நதி நீர்ப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்புமாறு வற்புறுத்த வேண்டும்.

19–4–1990 மாலை 4.00 மணிக்கு தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சருக்கும், கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. வீரேந்திர பட்டீல் அவர்களுக்கும் இடையே சுமார் மூன்று மணி நேரம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை அமைச்சரும், கர்நாடக அரசின் சட்டத் துறை அமைச்சரும், நீர்ப்பாசனத் துறை அமைச்சரும், இரண்டு மாநில அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மத்திய நீர்க் குழுவிலிருந்து (சி.டபிள்யூ.சி.) பார்வையாளர், (அப்சர்வர்) என்ற முறையில் தலைமைப் பொறியாளர் திரு. கராஜிக வந்திருந்தார்.

பேச்சுவார்த்தையின் விவரங்களை முதலமைச்சர் இன்று காலையிலே அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விளக்கினார்.

தமிழ்நாட்டின் தரப்பில் மேட்டூர் அணைக்கு, கர்நாடகத்திலிருந்து வரும் நீரில், கர்நாடகத்தின் தேவைகளைக் கருதி, சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 100 டி.எம்.சி. சிக்கனப் படுத்தி குறைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்றும், 1934 முதல் 1972 வரை நீண்ட காலப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலே மேட்டூரில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு 380 டி.எம்.சி. கிடைத்துள்ளதால், தமிழ்நாடு 280 டி.எம்.சி. பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்றும், இந்தச் சேமிப்பு வரும் பதினைந்து ஆண்டுகளில் சிக்கன வழிமுறைகளைப் பின்பற்றுவதின் மூலமாகச் செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டது.

1990 ஏப்ரல் 20] *[டாக்டர் மு. கருணாநிதி]*

கர்நாடகத்தின் சார்பில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கர்நாடகத்தின் தேவைகளுக்கு 414 டி.எம்.சி. தேவைப்படுமென்று கர்நாடகம் கோரியது. தமிழ்நாட்டின் தேவையை 444 டி.எம்.சி. என்று எடுத்துக் கொண்டு—இரு மாநிலங்களுக்கும் மொத்தமாக 858 டி.எம்.சி. தேவை என்று கர்நாடகா சார்பில் மதிப்பிடப்பட்டது. அதற்கு மாறாக காவிரி பாசனப் பகுதியிலே 75 சதவிகித நம்பகமான அடிப்படையில் 670 டி.எம்.சி. அளவிற்கு மட்டுமே நீர் ஆதாரங்கள் இருப்பதால், 188 டி.எம்.சி. பற்றாக்குறை ஏற்படும் என்றும், இந்தப் பற்றாக்குறையை இரு மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்றும் கர்நாடக மாநில சார்பிலே சொல்லப்பட்டது.

இதன்பொருட்டு, மத்திய நீர்க் குழு வல்லுனர்களோ அல்லது இரு மாநிலங்களின் பொறியாளர்களோ ஒரு ஆய்வு செய்ய வெண்டுமென்று கர்நாடகா கூறியது.

தமிழ்நாடு இந்த அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. 100 டி.எம்.சி. சிக்கனத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்ட பிறகே 444 டி.எம்.சி. தமிழ்நாட்டின் மிகக் குறைந்த பட்சத் தேவையாக மதிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனை நிகரப் பற்றாக்குறையை சமமாகப் பகிர்ந்து கொள்ளும் வகையில் மேலும் எந்த அளவிற்கும் குறைக்க இயலாதென்றும் தமிழகத்தின் சார்பில் திட்டவட்டமாக விளக்கப்பட்டது.

1934-72 காலக் கட்டத்தில் தமிழ்நாடு சராசரியாக 566 டி.எம்.சி. உபயோகித்துள்ளது. கர்நாடகா 177 டி.எம்.சி. உபயோகித்துள்ளது. இதற்கு மாறாக கர்நாடகத்தின் தேவையை 414 டி.எம்.சி. அளவிற்கு உயர்த்திவிட்டு, தமிழ்நாட்டின் தேவையை 444 டி.எம்.சி-க்கும் குறைத்த, பின்னரும், இதற்கு மேலும் தமிழ்நாடு தனது தேவையைக் குறைக்க வேண்டுமென்று கர்நாடகம் வாதாடுகிறது சரியல்ல என்று எடுத்துச் சொல்லப்பட்டது.

தமிழ்நாட்டின் தேவையை 566 டி.எம்.சி. யிலிருந்து 444 டி.எம்.சி. யாகக் குறைத்து விட்டு, கர்நாடகம் தனது தேவையை இப்போது 237 டி.எம்.சி. அதிகப்படுத்திக் காட்டி— பற்றாக்குறையை சமமாகப் 'பங்கிடுவது' என்ற பெயரால் மேலும் தமிழ்நாட்டிற்கு தண்ணீரைக் குறைக்க முயற்சிப்பதை ஏற்பதற்கில்லை.

மத்திய நீர்க் குழுவினர் புள்ளி விவங்ரகள் தர வேண்டுமென்றும், மீண்டும் ஆய்வுக் குழுக்கள் அமைக்க வேண்டுமென்றும் கர்நாடக மாநிலம் கூறுவது, பிரச்சினையை காலந் தாழ்த்தி கிடப்பில் போட்டு தமிழகம் மேலும் பாதிக்கப்படுகிற நிலைமையை உருவாக்கும். ஏற்கனவே, ஆய்வுக் குழு

புள்ளி விவரங்களைத் தந்து, அவற்றினை ஏற்று, அந்த அடிப்படையிலேயே பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

11-05 மணி

இந்த விவரங்களின் பின்னணியில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் விவாதங்களுக்குப் பின்னர், பின்வரும் முடிவிற்கு இந்தப் பேரவையும் வருகிறது :—

''1970 ஆம் ஆண்டிலேயே தமிழ்நாடு அரசு காவிரி நீர்ப் பிரச்சினை நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்று கோரியது. அதன் பின்னால், இந்த இருபதாண்டுக் காலத்தில் 26 முறை முதலமைச்சர்கள், அமைச்சர்கள் அளவிலே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுவிட்டன. இறுதியாக 19—4—1990 அன்று நடந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தையிலும் கர்நாடகம் எடுத்துள்ள நிலை, ஓரளவேனும் தமிழ்நாட்டின் குறைந்த அளவு தேவைகளைக் கூட நிறைவு செய்யும் வகையிலே இல்லை.

ஆகவே, பேச்சுவார்த்தை மூலமாக இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண இயலவில்லை என்றும், இனியும் காலதாமதம் ஏற்பட்டால் தமிழ்நாடு மேலும் பாதிக்கப்படும் என்றும் உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு எடுத்துக் கூறவேண்டும். மத்திய அரசும் உடனடியாக இந்தப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு இந்தச் சட்டமன்றப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது'' என்ற இந்த அறிவிப்பை இந்த அவையின் ஏகோபித்த முடிவாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் மேசையைத் தட்டி ஒலி எழுப்பியதன் மூலம் அவை ஒருமனதாக இம் முடிவை ஏற்றுக்கொண்டது).

3. மானியக் கோரிக்கைகள் 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டுக்கான போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது விவாதத்திலே கலந்து கொண்டு, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக கருத்துக்களைக் கூற அனுமதித்த உங்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.